**சுருக்கம்**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை – கோயம்புத்தூர் மாநகராட்சி – உலக தமிழ்ச் செம்மொழி மாநாடு, கோவை–2010 – அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் – ரூபாய் 703.75 லட்சம் அரசு மானியம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை**

**அரசு ஆணை (நிலை) எண்: 30** **நாள் : 10.02.2010**

**படிக்கப்பட்டது :**

1. மாவட்ட ஆட்சித்தலைவர், கோயம்புத்தூர் அவர்களின் கடித எண்.3/2009/உ.தி.செ.மா, நாள் 17.12.2009.
2. ஆணையாளர் கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களின் கடித எண்.12359/ 2009/ MD3 நாள் 21.1.2010 மற்றும் 30.1.2010.
3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடித எண்.59908/09 E3 நாள்:25.1.2010

----

**ஆணை :**

கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் மேலே வரிசை எண் இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், கோயம்புத்தூரில் 2010 ஜூன் மாதம் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெறுவதையொட்டி பலதரப்பட்ட மேம்பாடு மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்வதற்கு மாநில அரசு தீர்மானித்துள்ளதாகவும், அப்பணிகளில் சிலவற்றை கோவை மாநகராட்சி மூலம் செயல்படுத்தப்பட உள்ளதென்றும் தெரிவித்து அதற்கேற்ப, கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் பொது கழிப்பிடங்கள், மற்றும் பள்ளிகளிலுள்ள கழிப்பிடங்களை பராமரிப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் மற்றும் “உலக தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெறவுள்ள கொடீசியா” வளாகத்தில் தண்ணீர் வசதி, நவீன வசதிகளுடன் கூடிய நடமாடும் கழிவறைகள் மற்றும் மாநாடு நடைபெறும் காலத்தில் கீழ்கண்ட விவரப்படி பணிகளை மேற்கொள்வதற்கும் தற்காலிக துப்புரவு பணியாளர்களை நியமிப்பதற்கும் ரூபாய் 703.75 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரித்து அனுப்பியுள்ளார். இச்செலவினத்தை அரசு மானியமாக வழங்கவும் அவர் கோரியுள்ளார்.

| வ. எண் | விபரம் | எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | பொதுக்கழிப்பிடங்கள் மேம்பாடு | 26 | 87.60 |
| 2 | பள்ளி கழிப்பிடங்கள் மேம்பாடு | 19 | 50.75 |
| 3 | மாநாடு நடைபெறவுள்ள கொடீசியா (CODISSIA) வளாகத்தை சுற்றிலும் குடிநீர் மற்றும் கிணற்றுநீர் விநியோகம் | 3.562 கி.மீ (80 எண்ணிக்கை தொட்டியுடன்) | 90.30 |

…2

| | | | |
|---|---|---|---|
| 4. | மாநாடு நடைபெறவுள்ள வளாகத்தின் சாலையோரங்களில், நவீன வசதிகளுடன் கூடிய நடமாடும் கழிப்பிட வாகனம் வசதி | 60 எண்ணிக்கை | 346.00 |
| 5. | மாநாடு நடைபெறவுள்ள வளாகத்தை மாநாடு நடைபெறும் காலத்திலும், பின்பும் தற்காலிக சுகாதார பணியாளர்களை நியமித்தல். | 315 ஆட்கள் (15 நாட்களுக்கு மட்டும்) | 35.00 |
| 6. | மாநகராட்சி கல்யாண மண்டபங்கள் மற்றும் சமுதாயக் கூடங்கள் | 11 எண்ணிக்கை | 94.10 |
| | மொத்த தொகை ரூ. 703.75 இலட்சம் | | |

2. மேற்குறித்த சூழ்நிலையில், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் அனுப்பியுள்ள கருத்துருவை ஆய்வு செய்த அரசு அதனை ஏற்று கொண்டு மேற்கண்ட பணிகளை நிறைவேற்ற ரூ.703.75 இலட்சத்தை (ரூபாய் எழுநூற்று மூன்று இலட்சத்து எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) அரசு மான்யமாக வழங்கி ஆணையிடுகிறது.

3. இவ்வாணை நிதித் துறையின் இசைவினை அதன் அ.சா.எண். 210/FS/P/2010 நாள் 6.2.2010 மூலம் பெற்று வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி /

நிரஞ்சன்மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:
நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை–600 005.
ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர்
மாவட்ட ஆட்சித்தலைவர், கோயம்புத்தூர் மாவட்டம்
தனி அலுவலர்,உலக தமிழ்ச் செம்மொழி மாநாடு,சென்னை –600 009
மாண்புமிகு முதலமைச்சரின் செயலரின் தனிச்செயலர், சென்னை–600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,சென்னை –600 009.
நகல்:
வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை–600 009.
நிதித் துறை, சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் துறை செயலாளரின் தனிச்செயலர், சென்னை –600 009.
நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் (அந2)துறை, சென்னை–600 009.
இ.கோ/உதிரி நகல்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.